1981 ஏப்ரல் 16]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, பேராசிரியர் அவர்கள் முழு உண்மையையும் சொல்லவில்லை என்று சொன்னார்கள். எந்த அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கிறார்களோ அந்த அளவிற்குத்தான் சொல்ல முடியும். எல்லா விவரத்தையும் நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஓரளவு மானியக் கோரிக்கையில் சொல்லியிருக்கிறோம். தற்காலிகமாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று முடிவு எடுத்திருக்கிறோம்.

பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். சர்வீஸ் கமிஷன் ஒரு பட்டியலை அனுப்புகிறார்கள். தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் பட்டியலை அனுப்புகிறார்கள். அந்தப் பட்டியலில் இருக்கிற சில இடங்கள் காலியாக இருக்கிறது, சிலர் சேரவில்லை என்றால், இன்னும் சிலபேரை எடுத்துக்கொள்ள நாம் தயாராக இருக்கிறோம். எந்த இடத்திலே காலியிருந்தாலும், சர்வீஸ் கமிஷன் தேர்ந்தெடுத்து அனுப்பியவர்கள் சேரவில்லையென்று சொன்னால் அதற்குப் பிறகு அவர்களுக்கு வாய்ப்பே கிடையாது. அந்த பழைய முறை அப்படியேதான் இருக்கிறது. அதிலே எந்தவிதமான மாறுதலும் இல்லை. ஒரே ஒரு மாறுதல் செய்து இருக்கிறோம். தற்காலிகமாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நிறுத்தி வைத்திருக்கிறோம். அதற்குப் பதிலாக நிரந்தரமாக நாம் சர்வீஸ் கமிஷன் மூலமாக எடுத்துக்கொள்கிறோம்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்கிறபோது தற்காலிகமாக எடுத்துக்கொள்வதை நிறுத்தி வைத்து இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதனால்தான் வேலையில்லாத படித்துப் பட்டம் பெற்ற டாக்டர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அதனால் அரசாங்கத்தில் இடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது ஒரு பெரிய குறையாகக் கூட இருக்கிறது. இது மூன்று ஆண்டுகளாகத் தொடர்கின்ற காரணத்தினால் அரசு தன்னுடைய முறையை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, தற்காலிகமாக எடுத்துக்கொள்ள வேண்டாமென்ற முடிவு 3 மாதங்களுக்கு முன்புதான் எடுக்கப்பட்டது. அதற்கு மாறாக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக வரக்கூடிய எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்தி இருக்கிறோம்.

கோவையிலிருந்து நெல்லை பாபநாசத்திற்கு விரைவுப் பேருந்துப் பணி.

* வினா எண். 766— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

அ) கோயம்புத்தூரிலிருந்து திருநெல்வேலி வழியாக பாபநாசத்திற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

ஆ) அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

இ) அரசு சீக்கிரம் பஸ் விட ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அ) இல்லை.

ஆ) ஆம்.

இ) இத்தடத்தின் நீளம் விரைவுப் பேருந்து இயக்கத்திற்கான சராசரி ஓட்டத்திற்குக் குறைவானது. இத்தடத்தில் பேருந்தை இயக்குவதில் நட்டமே ஏற்படும். ஆகையால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இந்த இடத்தில் பேருந்தை இயக்கவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த கோவை — திருநெல்வேலி பேருந்தைப் பாபநாசத்திற்கு விடும் திட்டத்தை அரசு ஏற்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஏற்கனவே கோரிக்கை கொடுக்கும்போது அடுத்த தடவை மானியத்திலே வருகிறபோது கொடுப்பதாக சம்பந்தப்பட்ட மானேஜிங் டைரக்டர் அவர்கள் சொன்னார்கள். புதிய பஸ் தடங்கள் விடுகிறபோது பாபநாசத்திற்கு பஸ் விடுவதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, கோவையிலிருந்து பாபநாசத்திற்கு உள்ள தூரம் 432 கி.மீ. எனவே விரைவுப் பேருந்தை அதற்கு மட்டும் தனியாக, கோவையில் இருந்து பாபநாசம் வரை இயக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. குறைந்த பட்சம் 500 கி. மீ. ஆவது இருக்கவேண்டும். இல்லையென்றால் இலாபத்தில் ஓட்டுவதற்கு வாய்ப்பில்லை. உறுப்பினர் அவர்கள் கருத்தையும் ஏற்றுக் கொண்டு பாபநாசத்தைத் தொட்டுசெல்லக் கூடிய பேருந்தை இயக்க முடியுமா என்பதை ஆராய்ச்சி செய்வோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே ஒரு கிளாரிபிகேஷன் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வர விரும்புகிறேன். கோவையிலிருந்து திருநெல்வேலிக்கு பஸ் வந்து நிற்கிறது. அதற்கு பிறகு ஒரு 50 கி. மீ. தூரத்தில்தான் பாபநாசம் இருக்கிறது. குறைந்த தூரம் என்று யாரோ அமைச்சருக்குத் தவறாகத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். திருநெல்வேலிக்குப் பிறகுதான் பாபநாசம் இருக்

1981 ஏப்ரல் 16]

கிறது. திருநெல்வேலி பஸ்ஸை பாபநாசத்திற்கு நீட்டிக்க அரசாங்கம் முன்வருமா? நாகர்கோவில் பஸ் திருநெல்வேலி வந்து போகிறது. அதிலும் தனியாக பாபநாசத்திற்கு சீட் ஒதுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, கோவையிலிருந்து திருநெல்வேலிக்கு இடையே உள்ள தூரம் 380 கி. மீ. ஒரு பேருந்து அங்கே வந்துவிட்டு மீண்டும் கோவைக்கு வந்துவிடுகிறது ஒரே நாளில். பாபநாசம் போவது என்றால் 432 கி.மீ. தூரமாகிறது. அங்கே போய்விட்டு ஒரே நாளில் திரும்ப கோவை வர முடியாது. ஆனால், பாபநாசத்தை தொட்டுச் செல்கின்ற பேருந்தை இயக்க முடியும் என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஒருபேருந்து கோவையிலிருந்து திருநெல்வேலி சென்றுவர 600 கிலோமீட்டருக்கு மேலே ஆகிறது. அதை பாபநாசத்திற்கு நீட்டினால் ஒரு நாளில் வந்து செல்ல முடியாது என்ற காரணத்தால் தான் அதை சொன்னேன். ஆனால் பாபநாசத்தைத் தொட்டுச் செல்லும் அளவிற்கு நாம் பேருந்துகளை இயக்க முடியும் என்பதை இப்போது சொல்லியிருக்கிறேன்.

[முற்பகல் 9.40]

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் ஒரு அழகிய சுற்றுலா ஸ்தலம். அதற்கு அருகிலேயே அகஸ்தியர் அருவி, பாபநாசம் அணை போன்ற சுற்றுலா பயணிகள் வந்து போகக்கூடிய இடங்கள் இருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்திலேயே இது சிறந்த ஒரு சுற்றுலா ஸ்தலம். மற்ற மாவட்டங்களிலிருந்து வரக் கூடிய பேருந்துகள் இதுவரையில் வந்து செல்லுமானால், சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதாலே, இதனை அரசு மீண்டும் பரிசிலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியிலிருந்து பாபநாசம் 52 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. இதற்கு அரை மணி நேரத்திற்கு ஒரு பேருந்து,—மற்ற போக்குவரத்து கழக பேருந்து—விடப்படுகிறது. அந்த அடிப்படையிலே திருநெல்வேலியிலிருந்து போவதற்கு அதிகமான வாய்ப்பு இருக்கிற காரணத்தால் திருநெல்வேலி வரை விரைவு பேருந்தை நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். எனவே பாபநாசத்தைத் தொட வேண்டுமென்றுச் சொன்னால் அதற்காக நடவடிக்கை எடுப்பதாக நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

சென்னை—கொல்லம் இருப்புப்பாதை

*வினா எண். 767 திருமதி ஏ. எஸ். பொன்னம்மள் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—